# திண்டிவனம் நகராட்சியில் பட்டதாரிகளுக்கு பயிற்சி

**திண்டிவனம், ஆக. 31-**

திண்டிவனம் நகராட்சி சார்பில் இளங்கலை பட்டதாரிகளுக்கு இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நகராட்சி ஆணையாளர் வசந்தி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

திண்டிவனம் நகராட்சியில் நடைபெற்று வரும் சாலை திட்ட பணிகள், குடிநீர் வீட்டு இணைப்பு பணிகள், பாதாள சாக்கடை திட்டம், வீட்டு இணைப்பு பணிகள், திடக்கழிவு மேலாண்மை, நகரமைப்பு பணிகள் ஆகியவை குறித்து இளங்கலை பட்டம் பெற்று 18 மாதங்களுக்கு முகாமை உள்ள பட்டதாரிகளுக்கு ஓராண்டு காலம் இலவச பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி பெறும் நபர்களுக்கு ஊதியம் வழங்கப்படமாட்டாது. பயிற்சி முடித்ததற்கான சான்று மட்டுமே வழங்கப்படும்.

இந்த சான்றினை வேலை வாய்ப்புகளுக்கோ, நகராட்சி பணியில் சேர்வதற்கோ முன்னுரிமை மற்றும் உத்தரவாதமாக கருதக் கூடாது. பயிற்சியில் சேரும் பட்டதாரிகள், வரும் செப்டம்பர் 5ஆம் தேதிக்குள் நேரிலோ அல்லது www.internshipaicteindia.org என்ற இணையதளத்தில் பதிவு செய்து விவரத்தை நகராட்சியில் தெரிவிக்கலாம், என்று கூறப்பட்டுள்ளது.